பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024

**Prof. R. Kalidasan**
Registrar (FAC)

BHARATHIDASAN
UNIVERSITY
TIRUCHIRAPPALLI - 620 024
TAMILNADU, INDIA

*(Accredited with A+ Grade by NAAC in the 3rd Cycle with 3.32 CGPA: NIRF Rank: 36]*

கடித எண் 003/டி4/2025, நாள்: 12.02.2026

பெறுநர்

முதல்வர்
இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள்

அய்யா /அம்மையீர்,

பொருள்: பா.ப.க. - இணைவு பெற்ற கல்லூரிகளில் 2018-2019 ஆம் கல்வியாண்டு மற்றும் அதற்கு பின்னர் சேர்க்கைப் பெற்று இடைநிறுத்தம் செய்த மாணாக்கர்களது கல்விக் காலத்தை சிறப்பினமாக ஒரு ஆண்டு மட்டும் நீட்டித்து அனுமதிப்பது - தகவல் தெரிவித்தல் - தொடர்பாக

பார்வை:
1. UGC letter D.O. No.F12-1/2015 (CPP-II) dated15.10.2015
2. ஆட்சிக்குழுத் தீர்மான எண்2018.36 நாள்:15.03.2018
3. துணைவேந்தர் குழுவின் ஆணை நாள் 24.01.2026

----

பார்வை 01-இல் காணும் கடிதத்தில், புதுடெல்லி, பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு (UGC, New Delhi) வழிகாட்டு நெறிமுறைகளில், இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களின் கல்விக்காலத்தை (Span Period) நிர்ணயித்துள்ளதின் அடிப்படையில் இப்பல்கலைக்கழக ஆட்சிமன்றக்குழு ஒப்புதல் பெற்று கீழ்க்கண்டவாறு ஏற்னவே சுற்றறிக்கை இணைவு பெற்ற அனைத்து கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

a. The Candidates who got admitted on or after 2018-2019 onwards be allowed to complete the UG/PG Programme within two years from the completion of programme.
b. In exceptional circumstances a further extension of one more year may be granted. The exceptional circumstances be spelt out clearly by the relevant statutory body concerned of the University.
c. During the extended period the student shall be considered as a private candidate and also not be eligible for ranking.

இந்நிலையில், மாணவர்களின் கோரிக்கையின் அடிப்படையில், துணைவேந்தர் குழுவின் ஆணைப்படி, 2018-2019 ஆம் கல்வியாண்டு மற்றும் அதற்கு பின்னர் சேர்க்கை பெற்று இடைநிறுத்தம் செய்த மாணவர்களது எதிர்காலத்தை கருத்தில்கொண்டு சிறப்பினமாக கூடுதலாக **ஒரு கல்வியாண்டு** (2026-2027) மட்டும் நீட்டித்து அனுமதி வழங்கப்படுகிறது என்பதை தெரிவிக்கப் பணிக்கப்பட்டுள்ளேன்.

...2

எனவே இம்மாணவர்களை மீளப்பயிலுதல் (Re-Doing) மற்றும் மறுச்சேர்க்கை (Readmission) அடிப்படையில் அதே கல்லூரியிலோ அல்லது மாறுதலில் மறுச்சேர்க்கை (Transfer with Readmission) அடிப்படையில் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகள் அல்லது தொலைக்கல்வி மையத்தில் சேர்க்கை பெற்று இடைநிறுத்தம் செய்யப்பட்ட இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பினை தொடரவும், விண்ணப்பத்தினை முதல்வர் வழியாக பல்கலைக்கழகத்திற்கு **20.03.2026** அன்றோ அல்லது அதற்கு முன்னதாக விண்ணப்பித்து மீளப்பயிலுதல் (Re-Doing), மறுச்சேர்க்கை (Readmission) மாறுதலில் மறுச்சேர்க்கை (Transfer with Readmission) ஆணையை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இத்தகவலை விடுபட்ட மாணவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் கல்லூரி அறிவிப்பு பலகை மற்றும் சுற்றறிக்கை வாயிலாக மாணவர்கள் அறியும் வண்ணம் தகவல் தெரிவிக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

பதிவாளர் (மு.கூ.பொ.) 6/6

பெறுநர்

1. தேர்வு நெறியாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024
2. இயக்குநர், கல்லூரி மற்றும் பாடத்திட்ட வளர்ச்சிக்குழும பிரிவு, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024
3. இயக்குநர், தொலை மற்றும் இணையதளக் கல்வி மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024